www.Padasalai.Net www.CBSEtips.in

KK12T

கன்னியாகுமரி மாவட்டப் பொதுத் தேர்வுகள்
காலாண்டுப் பொதுத் தேர்வு - செப்டம்பர் 2022

வகுப்பு 12

காலஅளவு 3.00 மணி நேரம் **பொதுத்தமிழ்** மதிப்பெண்கள் : 90

**அறிவுரை :** 1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப் பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு :** விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

பகுதி - I

**குறிப்பு :** i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 14×1=14

ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. "காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை" - இத்தொடரில் 'கலன்' உணர்த்தும் பொருள்

அ) போர்க்கருவி ஆ) தச்சுக்கருவி இ) இசைக்கருவி ஈ) வேளாண் கருவி

2. வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம்

அ) பருவநிலை மாற்றம் ஆ) மணல் அள்ளுதல்

இ) மழைத்துளிகள் ஈ) நீர்நிலைகள்

3. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.

| | | |
|---|---|---|
| அ) உரிமைத்தாகம் | - | 1. பாரசீகக் கவிஞர் |
| ஆ) அஞ்ஞாடி | - | 2. பூமணி |
| இ) ஜலாலுத்தீன் ரூமி | - | 3. பக்தவச்சல பாரதி |
| ஈ) தமிழர் குடும்ப முறை | - | 4. சாகித்திய அகாதெமி |

அ) 2 4 3 1 ஆ) 3 4 1 2 இ) 2 4 1 3 ஈ) 2 3 4 1

4. கலைச்சொல் தருக : 'Fiction'

அ) நூல் நிரல் ஆ) புனைவு இ) ஒப்பவுறை ஈ) சாட்டுரை

5. மெய்ப் படிமத்துக்குரிய பாடலைத் தேர்வு செய்க.

அ) நெருஞ்சிக் கட்கின் புதுமலர் முட்பயந் தாங்கு .....

ஆ) கட்டில் நிணக்கும் இழிசினன் கையது .....

இ) பாசிமணிக் கண்ணும் சிவப்புக் கோட்டுக் கழுத்தும் ....

ஈ) வெந் தாறு பொன்னின் அந்தி பூப்ப ......

6. 'விளியறி ஞமலி' - இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது?

அ) எருது ஆ) குதிரை இ) நாய் ஈ) யாழி

7. கூற்று 1 : 18 வயது நிறைவடையாத குழந்தைகள் ஊர்தி இயக்குவது சட்டப்படி தவறு

கூற்று 2 : சட்டத்தை மீறி ஊர்தி இயக்கும் குழந்தைகளின் பெற்றோருக்கு 1 வருட சிறை தண்டனை வழங்கப்படும்.

அ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு ஆ) இரண்டு கூற்றும் சரி

இ) இரண்டு கூற்றும் தவறு ஈ) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

8. 'உவா உற வந்து கூடும்

உடுபதி, இரவி ஒத்தார்' - யார் யார்?

அ) சடாயு, இராமன் ஆ) இராமன், குகன் இ) இராமன், சுக்ரீவன் ஈ) இராமன், சவரி

9. 'நெல்லைத் தென்றல்' என்னும் நூல்

அ) கவிதை நூல் ஆ) உரைநடை நூல் இ) கடித இலக்கிய நூல் ஈ) வரலாற்று நூல்

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593
Scanned with CamScanner

www.Padasalai.Net www.CBSEtips.in



10. சுவடியோடு பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க.

அ) வசம்பு ஆ) மணத்தக்காளியிலைச் சாறு

இ) கடுக்காய் ஈ) மாவிலைக் கரி

11. அணியிலக்கணத்தை மட்டுமே கூறும் இலக்கண நூல்

அ) குவலயானந்தம் ஆ) வீரசோழியம்

இ) முத்துவீரியம் ஈ) தொன்னூல் விளக்கம்

12. 'நீர் படு பசுங்கலம்' - இதில் 'பசுங்கலம்' என்ற சொல்லின் இலக்கணக் குறிப்பு

அ) வினைத்தொகை ஆ) எண்ணும்மை

இ) பண்புத்தொகை ஈ) உம்மைத்தொகை

13. திருவள்ளுவர் பல்கலைக்கழகம் அமைந்துள்ள இடம்

அ) மதுரை ஆ) சென்னை இ) தஞ்சாவூர் ஈ) வேலூர்

14. சுரதா நடத்திய கவிதை இதழ்

அ) இலக்கியம் ஆ) காவியம் இ) ஊர்வலம் ஈ) விண்மீன்

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3 x 2 = 6

15. கலிவிழா, ஒலிவிழா - விளக்கம் தருக.
16. நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது. - விளக்கம் தருக.
17. வசனம், கவிதை - வேறுபாடு தருக.
18. நிலையாமை குறித்து, சவரி உரைக்கும் கருத்து யாது?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2 x 2 = 4

19. புக்கில், தன்மனை - சிறுகுறிப்பு எழுதுக.
20. அக்காலத்துக் கல்வி முறையில் மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் யாவை?
21. கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.

### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** 7 x 2 = 14

22. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

என்னுடைய நம்பிக்கை முழுவதுமே புதியத் தலைமுறை மீதுதான்; அவர்கள் எல்லா பிரச்சனைகளையும் ஒரு சிங்கத்தை போல எதிர்கொண்டுத் தீர்ப்பார்கள்.

23. ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் பகுபத உறுப்பிலக்கணம் தருக :

அ) தந்தனன் ஆ) சாற்றி

24. உவமைத் தொடர்களைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக.

அ) உள்ளங்கை நெல்லிக்கனி போல ஆ) எலியும் பூனையும் போல்

25. ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் புணர்ச்சி விதி தருக.

அ) தனியாழி ஆ) பூம்பாவாய்

26. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

விலை, விளை, விழை

27. பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்களாக ஆக்குக.

அ) குமரன் வீடு பார்த்தேன்.

ஆ) சான்றோர் மதிப்பு கொடுத்து வாழ்வு உயரலாம்.

28. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க: அ) பலகை ஆ) தலைமை

29. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.

அ) மானம் பார்த்த பூமியில் பயிறு வகைகள் பயிரிடப்படுகின்றன.

ஆ) எங்கள் ஊரில் நூலகக் கட்டிடம் கட்ட அரசு நிதி ஒதுக்கியது.

30. வெண்பாவிற்குரிய தளைகள் யாவை?

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

Scanned with CamScanner

www.Padasalai.Net www.CBSEtips.in



பகுதி - III

பிரிவு - 1

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 x 4 = 8

31. 'நெல்லின் நேரே வெண்கல் உப்பு' - இத்தொடரின் வழி பண்டமாற்று வணிகத்தை விளக்குக.

32. சடாயுவைத் தந்தையாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமையை எழுதுக.

33. 'மூன்றான காலம் போல் ஒன்று' - எவை? ஏன்? விளக்குக.

34. கூதிர் காலத்தின் தன்மையால் நிகழ்ந்தவை என நெடுநல்வாடைக் குறிப்பிடுவன யாவை?

பிரிவு - 2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 x 4 = 8

35. பேரிடர் மேலாண்மை ஆணையம் - விளக்கம் தருக.

36. சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில், இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.

37. எழுத்தாணிகள் - குறிப்பு வரைக.

38. சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் - விளக்குக.

பிரிவு - 3

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3 x 4 = 12

39. அ) நிரல்நிறை அணியைச் சான்று தந்து விளக்குக.

*(அல்லது)*

ஆ) 'சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்'- இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

40. **பா நயம் பாராட்டுக : மையக் கருத்தை எழுதி ஏதேனும் மூன்று நயங்களை எழுதுக.**

பிறப்பினால் எவர்க்கும் - உலகில்
பெருமை வாராதப்பா !
சிறப்பு வேண்டுமெனில் - நல்ல
செய்கை வேண்டுமப்பா !
நன்மை செய்பவரே - உலகம்
நாடும் மேற்குலத்தார் !
தின்மை செய்பவரே - அண்டித்
தீண்ட ஒண்ணாதார். கவிமணி தேசிக விநாயகம்

41. **கீழ்க்காணும் பழமொழிகளில் ஏதேனும் ஒன்றினை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.**

அ) ஊழி பெயரினும் தாம் பெயரார்

*(அல்லது)*

ஆ) யானைக்கும் அடி சறுக்கும்

42. **தமிழாக்கம் தருக.**

Periyar was not only a great social revolutionary ; he was something more than that. He is known as a great champion of the underprivileged; even in this sphere he was much more than that. His sphere of activity was very wide and when he took up any issue he went deep into it, understood all the aspects of it and did not rest until he had found a permanent solution to it. Communal differences in our society were deep - tooted and appeared to be permanent features of our society until Periyar came on these scene.

*(அல்லது)*

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593
Scanned with CamScanner

www.Padasalai.Net www.CBSEtips.in



42. **காது கேளாதவர்களுக்கான மாற்று வினா :**

**கீழ்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை. மொழியே மக்கள் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாகவும் உள்ளது. பெற்ற தாயின் முதல் வேட்கை தன் குழந்தையுடன் பேசுதல். அவள் முதலில் அடையும் பெரிய மகிழ்ச்சி, குழந்தையின் பேச்சைக் கேட்பதே ஆகும். மனம் என்பது பெரும்பாலும் மொழியால் வளர்ந்து அமைந்தது. மனதின் வளர்ச்சிக்கு ஏற்பவே பேசுவோரின் மொழியும் வளர்ச்சிப் பெற்று நிற்கும். மக்கள் அனைவரும் மொழிக்கு ஆசிரியராகவும் உள்ளனர். மாணவராகவும் உள்ளனர். மொழியை வளர்ப்பவரும் மக்களே. மொழியால் வளர்பவரும் மக்களே.

**வினாக்கள்**

1. மொழி என்பது யாது?
2. பெற்ற தாயின் முதல் வேட்கை யாது?
3. மொழி வளர்ச்சி எதனோடு தொடர்புடையது?
4. இப்பத்திக்கு ஏற்ற தலைப்பு தருக.

43. அ) பாடாண்திணையைச் சான்றுடன் விளக்குக.

**(அல்லது)**

ஆ) நெய்தல் திணையைச் சான்றுடன் விளக்குக.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** **3 x 6 = 18**

44. அ) தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

**(அல்லது)**

அ) செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறைவாழ்த்தின் துணைகொண்டு நிறுவுக.

45. அ) கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக.

**(அல்லது)**

ஆ) பண்டைக்காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்கள் இடையே நிகழ்ந்த கற்றல் கற்பித்தல் முறைகளைத் தொகுத்து எழுதுக.

46. அ) பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை விவரிக்க.

**(அல்லது)**

ஆ) 'சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு' - இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியன யாவை?

## பகுதி - V

47. **அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக.** **4 + 2 = 6**

அ) 'குகனோடும்' - எனத் தொடங்கும் கம்பராமாயண மனப்பாடப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

[redacted]

ஆ) 'பொருள்' - என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.

******

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593
Scanned with CamScanner